RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 19 | ஜனவரி.25 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# துணை மருத்துவப் படிப்புகளுக்கும் ‘நீட்’ தேர்வை கட்டாயம் ஆக்குவதை கைவிடுக: முதல்வர் ஸ்டாலின்

சென்னை: ஜன.25-

துணை மருத்துவப் படிப்புகளுக்கு நீட் தேர்வை கட்டாயமாக்கி அறிவித்துள்ளதை உடனடியாக கைவிட வலியுறுத்தி முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின், எழுதியுள்ள கடிதத்தில், “தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் (NCAHP), வரவிருக்கும் கல்வியாண்டு முதல் இளங்கலை பிசியோதெரபி (B.PT) மற்றும் இளங்கலை ஆக்குபேஷனல் தெரபி (B.OT) ஆகிய இரண்டு பட்டப்படிப்புகளில் சேருவதற்கு, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET) பங்கேற்பதைக் கட்டாயமாக்கியுள்ளது. இந்த அவசரமான மற்றும் தன்னிச்சையான முடிவினால், பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்பதால் அதனை உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும்.

இளநிலை மருத்துவப் படிப்பு (MBBS) சேர்க்கைக்கான நீட் தேர்வை, தமிழ்நாடு தொடர்ந்து உறுதியாக எதிர்த்து வருகிறது. மற்ற துணை மருத்துவப் படிப்புகளுக்கும் நீட் தேர்வு கட்டாயமாக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் தொடர்ச்சியாக எச்சரித்து வருகிறது. துரதிருஷ்டவசமாக, தமிழ்நாட்டின் அச்சங்கள் இன்று உண்மையாகிவிட்டன.

எதிர்காலத்தில் அனைத்து துணை மருத்துவப் படிப்புகளுக்கும் (Allied Health Care Courses-AHCs) நீட் தேர்வைக் கட்டாயமாக்கும் ஒரு பெரிய திட்டத்தின் முதல்படியாக, இரண்டு படிப்புகளுக்கு நீட் தேர்வு பரிந்துரைக்கப்படுவதாக ஒன்றிய சுகாதார அமைச்சகத்தின் சமீபத்திய தகவல்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

அரசமைப்புச் சட்டப்படி சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரு துறைகளுக்கும் பொறுப்பான மாநில அரசுகளுடன் முறையான கலந்தாலோசனைகளை செய்யாமல் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி மாநில அரசால் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

நாங்கள் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தது போல, நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டதால், 12,000 எம்.பி.பி.எஸ் இடங்களுக்குப் போட்டியிட 1.40 லட்சம் மாணவர்கள், பயிற்சி வகுப்புகளுக்கு அதிக கட்டணம் செலுத்தி நீட் தேர்வை எழுத வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களது குடும்பத்தினருக்குத் தேவையற்ற செலவு, மன அழுத்தம் மற்றும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.



மேலும் பள்ளித் தேர்வுகளில் காட்டும் செயல்திறனைப் பயனற்றதாக்கிவிட்டது. இந்தத் தவறான நடைமுறையை துணை மருத்துவப் படிப்புகளுக்கும் விரிவுபடுத்துவது என்பது நிலைமையை மேலும் மோசமாக்கும். தமிழ்நாட்டில் துணை மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்திற்கும் அதிகமாகும். இந்த இடங்களுக்குச் சேர விரும்பும் லட்சக்கணக்கான மாணவர்கள், எம்.பி.பி.எஸ் படிக்க விரும்பும் மாணவர்களை விட மிகவும் பின்தங்கிய சமூகப் பொருளாதாரப் பின்னணியைக் கொண்டவர்கள். இது ஏழைக் குடும்பங்களை நீட் பயிற்சிக்குச் செலவழிக்கக் கட்டாயப்படுத்தும் ஒரு பெரும் அநீதியாகும்.

நீட் தேர்வில் பங்கேற்றிருக்க வேண்டுமென்பதை ஒரு தகுதியாக நிர்ணயித்திருப்பது என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது. உலகளவில், ஒரு தேர்வில் தேர்ச்சி பெறுவதன் மூலமோ அல்லது அதில் அதிக மதிப்பெண் பெறுவதன் மூலமோ கல்வித்தகுதி வரையறுக்கப்படுகிறது.

ஒரு நுழைவுத் தேர்வில் பங்கேற்றிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது சரியானதல்ல, இது நீட் தேர்வை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனால் லட்சக்கணக்கானோர் நீட் பயிற்சியை நாடும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு, இறுதியில் ஏழைக் குடும்பங்களின் செலவில் நீட் பயிற்சி மையங்கள் நன்றாக லாபம் பெறும்.

எம்.பி.பி.எஸ் சேர்க்கைக்கான தகுதியாக நீட் (NEET) மதிப்பெண் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், தகுதி மதிப்பெண்கள் (cut-offs) படிப்படியாகக் குறைக்கப்பட்டு, கிட்டத்தட்ட பூஜ்ஜியத்திற்கு இணையாகக் கொண்டு வரப்பட்டுள்ளதால், இது மாணவர்களின் தரம் குறித்த வாதத்தை முற்றிலும் அர்த்தமற்றதாக்குகிறது.

இந்தச் சூழலில், துணை மருத்துவ படிப்புகளுக்கான சேர்க்கை நடைமுறைகள் மாநில அரசின் அதிகார வரம்பிற்குள்ளேயே நீடிக்கவேண்டும் என்பதும், இந்தச் சேர்க்கைக்கு நீட் தேர்வினை விலக்கி வைக்கப்படவேண்டும் என்பதும் மிகவும் அவசியமாகும். எனவே, இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யவேண்டும். இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிடுமாறும் தேசிய துணை மருத்துவ ஆணையத்திற்கு (NCAHP) அறிவுறுத்தவேண்டும்.


மேலும், இந்த விஷயத்தின் அவசரத் தன்மையைக் கருத்தில்கொண்டு, பிரதமர் மோடியின் விரைவான தலையீட்டை எதிர்ப்பார்க்கிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் மோடி வருகையை எதிர்த்து கருப்பு கொடி போராட்டம் நடத்திய காங்கிரஸ் கட்சியினர் கைது

சென்னை, ஜன.25-

கிராமப்புறங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் பெயரை மாற்றியது மற்றும் அதில் இருந்த மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியதை கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்து வருகிறது.

இந்நிலையில், நேற்று தமிழகம் வந்த பிரதமர் மோடிக்கு எதிராக கருப்பு கொடி காட்டி போராட்டம் நடத்த இருப்பதாக காங்கிரஸ் அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு, முன்னாள் எம்பி பெ.விஸ்வநாதன் தலைமையில் காங்கிரஸார் மதுராந்தகத்தில் கூடி தீப்பந்தம் ஏற்றி எதிர்ப்பு தெரிவித்தனர்.



அவர்களை போலீஸார் கைது செய்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்சி அணி தலைவர் ரஞ்சன்குமாரை போலீஸார் நேற்று முன்தினம் வீட்டு காவலில் வைத்தனர். இந்நிலையில், அவர் தனது வீட்டு மாடியில் மோடியே, திரும்பி செல் என்ற வாசகம் இடம் பெற்ற பலூனை பறக்க விட்டார்.

இதன் தொடர்ச்சியாக, மாவட்ட தலைவர் ஜெ.டில்லிபாபு தலைமையில் பெரியமேடு பகுதியில் கருப்பு உடை அணிந்து, கருப்பு கொடி ஏந்தி, கருப்பு பலூன்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸாரை போலீஸார் கைது செய்தனர்.

மேலும், பர்கிட் சாலை பெரியார் சிலை அருகிலும் கருப்பு கொடி காட்டிய காங்கிரஸார், டில்லி பாபுவின் வட சென்னையில் உள்ள அலுவலகம் முன்பு கருப்பு கொடியுடன் கூடிய காங்கிரஸாரை போலீஸார் கைது செய்து, பின்னர் மாலையில் விடுவித்தனர்.

## “அரசின் வர்த்தக ஒப்பந்தங்கள் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குகின்றன” பிரதமர் மோடி

புதுடெல்லி, ஜன.25-

திறமையான இளைஞர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாய்ப்புகளை வழங்கும் வகையில் மத்திய அரசு, பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

18வது வேலைவாய்ப்புத் திருவிழாவின் கீழ் மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 61,000க்கும் அதிகமான இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் விழா இன்று நடைபெற்றது. இதில், காணொலிக்காட்சி மூலம் பங்கேற்று நியமனக் கடிதங்களை வழங்கிய பிரதமர் நரேந்திர மோடி, பின்னர் அவர்களுக்காக உரையாற்றினார்.



அப்போது அவர் கூறியதாவது: ‘‘உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டின் திறமையான இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது.

நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுவடைந்திருக்கிறது. பத்தாண்டுகளுக்குள் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜிடிபி) இரட்டிப்பாக்கிய உலகின் ஒரே பொருளாதாரம் இந்தியாதான். இன்று, 100க்கும் மேற்பட்ட நாடுகள் அந்நிய நேரடி முதலீடு (திஅமி) மூலம் இந்தியாவில் முதலீடு செய்கின்றன. 2014க்கு முந்தைய பத்தாண்டுகளுடன் ஒப்பிடும்போது அந்நிய நேரடி முதலீட்டு வரவு 2.5 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. இந்த அந்நிய முதலீட்டின் வரவு, இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

'ஜன கண மன' பாடலை தேசிய கீதமாகவும், 'வந்தே மாதரம்' பாடலை தேசியப் பாடலாகவும் அரசியல் சாசனம் அங்கீகரித்த நாள் ஜனவரி 24. வேலைவாய்ப்புத் திருவிழா (ரோஜ்கர் மேளா) ஒரு நிறுவனமாக மாறியுள்ளது. இதுவரை லட்சக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர்.

இன்று விநியோகிக்கப்பட்ட பணி நியமனக் கடிதங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக உங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு. வளர்ந்த இந்தியாவை நோக்கி இளைஞர்களை வழிநடத்துவதற்கான ஒரு சங்கல்ப பத்திரம்’’ இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

ரோஜ்கர் மேளா தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை நாடு முழுவதும் 11 லட்சத்துக்கும் அதிகமான வேலை நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 18வது வேலைவாய்ப்புத் திருவிழா நாடு முழுவதும் 45 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் பல பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இவர்கள், மத்திய உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, நிதிச் சேவைகள் துறை, உயர்கல்வித்துறை உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணியில் சேர உள்ளனர்.

## கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் போராட்டம் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் விளக்கம்

சென்னை, ஜன.25-

கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் போராட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் கோழிக் குஞ்சுகளை விவசாயிகளிடம் கொடுத்து வளர்த்து 45 நாட்களுக்குப் பின் திரும்ப பெற்றுக் கொள்கிறார்கள்.

இதற்காக, ஒரு கிலோ கோழிக்கு ரூ.6.50 கூலியாக தருகிறார்கள். இந்த கூலியை ரூ.20 ஆக உயர்த்தி தரும்படி பல்வேறு மாவட்டங்களில் கறிக்கோழி வளர்ப்பு உரிமையாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களில் பலர் கைது செய்யப்பட்டனர்.



இதுதொடர்பாக, தமிழக சட்டப்பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் நேற்று கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்தில் விவசாயிகள் கோரிக்கையை நிறைவேற்றி தர வலியுறுத்தி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கொங்கு ஈஸ்வரன், அப்துல் சமது, ஏ.கே. செல்வராஜ், அருள், ராஜேஷ் கண்ணா, ராமச்சந்திரன், நாகை மாலி பேசினர்.

இதற்கு, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பதிலளித்து பேசுகையில், “இந்த விவகாரம் கறிக்கோழி வளர்ப்பவர்களுக்கும், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களுக்குமான பிரச்சினையாகும்.

அவர்களே கூலி மற்ற விஷயங்களை பேசித் தீர்த்துக் கொண்டு வந்தார்கள். இதற்கும், அரசுக்கும் நேரடியாக எந்த சம்பந்தமும் இல்லை.

அதேநேரம், இந்த விவகாரம் முதல்வர் கவனத்துக்கு சென்றதால், இதுதொடர்பாக, ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 20 ஆயிரம் விவசாயிகள் 66 நிறுவனங்களுக்காக கோழி வளர்க்கிறார்கள். ஆண்டுக்கு 50 முதல் 55 கோடியளவில் கோழிகள் வளர்க்கப்படுகின்றன இந்த பிரச்சினை சுமூகமாக பேசி தீர்க்கப்படும்” என்று தெரிவித்தார்.

## “தமிழ் மக்களின் அனைத்து துயரங்களுக்கும் காங்கிரஸ் தான் காரணம்” சீமான்

சென்னை, ஜன.25-

“தமிழ் மக்கள் இந்த மண்ணில் படும் அனைத்து துயரங்களுக்கும் காரணம் காங்கிரஸ்தான். முதலில் இந்தியை திணித்து எனது தாய் மொழியாம் தமிழை அழிக்க நினைத்தது காங்கிரஸ்.” என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த சீமான், “தமிழகத்தில் ஆட்சி முறை மாற வேண்டும். தாலிக்கு தங்கம் கொடுப்பார்கள். பின்னர் மதுவை குடிக்கவைத்து அவர்களே தாலியை அறுப்பார்கள். ரேஷனில் இலவசமாக அரிசி போடுகிறார்கள். அதை எத்தனை அமைச்சர்கள், எம்பிக்கள், எம்எல்ஏக்கள் வாங்கி சாப்பிடுகிறார்கள். மக்கள் விநியோகத்துக்கு வரும்போது தரம் குறைவாக இருக்கிறது.

தமிழகத்தின் தலைநகரில் இன்னும் தண்ணீர் தேங்கி கொண்டுதான் இருக்கிறது. மக்களை வெள்ளத்தில் மிதக்க விட்டுவிட்டு வெள்ள நிவாரணம் கொடுத்ததெல்லாம் ஆட்சி இல்லை. எவ்வளவு வெள்ளம் வந்தாலும், அதை வழிந்தோட செய்வதுதான் ஆட்சி.

எனக்கும், என் கொள்கைக்கும் யாரும் போட்டியில்லை, ஒருவர் இருமொழி கொள்கை என்பார், ஒருவருக்கு கொள்கை என்றால் என்னவென்றே தெரியாது. கூட்டணி அமைப்பவர்களுக்கு கொள்கை இல்லை, சீட்டுகள் மட்டுமே இலக்கு.

திமுகவுக்கு மாற்று அதிமுக என எப்படிச் சொல்ல முடியும். தமிழகத்தில் கடன் வளர்ச்சி தான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. கூட்டணி வைத்து கூடி கொள்ளையடித்தால் எல்லாம் சரியாகிவிடுமா? தேர்தல் வந்த பிறகு பேரம் பேசுவது கேவலம்.

அரசியல் இங்கே வியாபாரம் ஆக்கப்படுகிறது. யார் அதிக காசு மற்றும் சீட்டுகள் கொடுக்கிறார்களோ அவர்களிடம் சென்றுவிடுகிறார்கள். அடர்த்தியான வறுமை, அறியாமை எனும் குழந்தையைப் பெறுகிறது. வறுமையும் அறியாமையும் சேரும்போது மறதி வருகிறது. இவை மூன்றும் இப்போதிருக்கும் அரசியல்வாதிகளுக்கு முதலீடாக மாறிவிடுகிறது.

வெற்றியையும் தோல்வியையும் சமமாகக் கருதுபவன்தான் வீரன். வெற்றியடைந்தால் இருப்பேன்.. தோல்வியடைந்தால் சென்றுவிடுவேன் என்பவன் கோழை. எங்களுக்கு தெரியாத மூன்றெழுத்து பயம். எங்கள் பரம்பரைக்கே தெரிந்த மூன்றெழுத்து வீரம். திமுகவை ஒழிக்க வேண்டும் எனக் கூறுகிறார்களே தவிர, மக்களுக்கான அரசியலை கொண்டு வர வேண்டும் என நினைக்கவில்லை. மதவாத கட்சியை முதலில் கதவை திறந்து கொண்டு வந்தது யார்?

சீமானுக்கு வாக்களித்தால் பாஜக ஆட்சிக்கு வந்து விடும் எனக் கூறுகிறார்கள். இவர்களுக்கு அடிப்படை அறிவு கூட கிடையாது. தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வந்துவிடும் என சொல்வதற்கு ஒரு ஆட்சியா? ஒரு தலைவரா?. தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வராது என்று தைரியமாக சொல்ல வேண்டும். தமிழ் மக்கள் இந்த மண்ணில் படும் அனைத்து துயரங்களுக்கும் காரணம் காங்கிரஸ்தான். முதலில் இந்தியை திணித்து எனது தாய் மொழியாம் தமிழை அழிக்க நினைத்தது காங்கிரஸ்” இவ்வாறு அவர் கூறினார்.



# நியோமேக்ஸ் வழக்கில் வரலாற்று தீர்வு!

மதுரை, ஜன 25-

நியோமேக்ஸ் குழுமம் தொடர்பான மோசடி வழக்கில் பாதிக்கப்பட்ட 60,000க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுக்கு தீர்வு வழங்கும் வகையில், DTCP அங்கீகாரம் பெற்ற "Pool-A" வீட்டு மனைகளை பொது ஏலத்தில் விற்பனை செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழகமெங்கும் உள்ள 31 லேஅவுட்களில் 18,666க்கும் மேற்பட்ட மனைகள் ஏலத்திற்கு வரவுள்ளன. ஏலத்தில் திரட்டப்படும் தொகை முதலீட்டாளர்களுக்கு தீர்வாக வழங்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



■ மதுரை மாவட்டம், அவனியாபுரம், என்.எஸ். சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியில் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் மாவட்ட அளவிலான பாரதியார் தினம், குடியரசு தினம் டேக்வாண்டோ மற்றும் ஸ்குவாஷ் புதிய விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட கல்வி அலுவலர் தயாளன் உடன் உள்ளார்.

# காவேரிப்பட்டினம் முன்னாள் மிட்டஹள்ளி ஊராட்சி தலைவர், காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர், சுப்பிரமணியன் B ,Com அவர்களின் அறிக்கை

கிருஷ்ணகிரி, ஜன.25,-

கிருஷ்ணகிரி மாவட்டம்காவேரிப்பட்டினம் வட்டம், மிட்டஹள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட மிட்டஹள்ளி கிராமத்தில் சாப்பரம் மொயின் ரோட்டில் அமைந்துள்ள

பி.லோகநாதன் - சன் என்ற பெயரில் மிட்டஹள்ளி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் மாவட்டத்தலைவரும், தற்போதைய காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு



உறுப்பினருமான

எல். சுப்பிரமணியன் அவர்களின் தேங்காய் மற்றும் மாங்காய் கொள்முதல் நிலையத்தின் திறப்பு விழா வருகின்ற 2912026 வியழாக்கிழமை அன்று காலை 9 மணி முதல் மாலை 3 மணி நடைப்பெற உள்ள இந்த திறப்பு விழாவிற்கு வியாபாரிகள் மற்றும் விவசாயபெருங்குடி மக்கள் மட்டுமின்றிநமது காங்கிரஸ் கட்சியின் சொந்தங்கள்

மற்றும் தோழமை கட்சியை சேர்ந்தவர்கள் மற்றும் தாய்மார்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த விழாவில் கலந்துக் கொண் டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறேன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பேரூராட்சி வார்டு எண் 7 பகுதியில் பாகம் எண் 64 ல் வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட படிவங்களான 6,7 மற்றும் 8 ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சிறப்பு தேர்தல் பார்வையாளர் இணை செயலாளர், எரிசக்தி துறை,மகபிர் பிரசாத், மிஸிகிஷி. அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்களுடன் இணைந்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், உதவி தேர்தல் அலுவலர் அபிநயா, வட்டாட்சியர் சின்னசாமி ஆகியோர் உள்ளனர்.

# தாம்பரம் காந்திரோடில் Purple B" எனும் புதிய உணவகத்தின் கடை திறப்பு விழா

தாம்பரம் ஜன.25-

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் காந்திரோடில் Purple B" எனும் புதிய உணவகத்தின்கடை திறப்பு விழா தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக துணை செயலாளர் ஐ.கே. தர்மா முன்னிலையில் நடைபெற்றது. இந்த விழாவில் விசிக மாவட்ட செயலாளர் சாமுவேல் எபிநேசர், தேமுதிக மாவட்ட துணை செயலாளர் மா.செழியன், தாம்பரம் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் காந்தி சேகர், மேற்கு பகுதி



செயலாளர் மார்கெட் ஞானபால், பொருளாளர் ஜார்ஜ் உள்ளிட்டோர் கலந்து கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி கடையை திறந்து வைத்தனர். திறப்பு விழாவை முன்னிட்டுபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு புதிய உணவகத்தை பார்வையிட்டு

உணவுகளின் தரத்தை பாராட்டினர்.

# தேவகோட்டை அருகே அடிப்படை வசதிகள் செய்ய வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் அறிவிப்பு அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் மறியல் போராட்டம் தற்காலிக ஒத்திவைப்பு

தேவகோட்டை ஜன 25-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே முள்ளிக்குண்டு பகுதியில் சுமார் 250 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். குடிநீர், சாலை வசதிகள், பேருந்து நிறுத்த நிழல் குடை, ரேஷன் கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்ய வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்திடம் பல முறை

மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்காததால் தேவகோட்டை காரைக்குடி சாலையில் சாலை மறியல் போராட்டம் செய்யப் போவதாக அறிவித்தனர். இதனை தொடர்ந்து



அதிகாரிகள் நடத்திய பேச்சு வார்த்தையால் தற்காலிகமாக சாலை மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. இது குறித்து கிராம மக்கள் தெரிவிக்கையில் தங்களது கிராமத்துக்கு அடிப்படை வசதிகள் எந்த ஒரு நலத்திட்டமும் நடைபெறவில்லை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர், எம் எல் ஏ, எம் பி முதலமைச்சர் என அனைவருக்கும் மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இதனால் மனவேதனை அடைந்து கிராம மக்கள் அனைவரும் இந்த தர்ணா போராட்டம் நடத்தினோம் தமிழக அரசு எங்க கிராம மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். சுகாதார மையம் கட்டிடம் கட்டியும் பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. எங்களது கோரிக்கைகளை சரியான முறையில் நிறைவேற்றவில்லை என்றால் வரும் சட்டமன்ற தேர்தலை புறக்கணிப்போம் என்று கூறினர்.









# தொண்டி அருகே காரங்காடுஅமல அன்னை மேல்நிலைப்பள்ளி 27 ஆம் ஆண்டு ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது

தொண்டி, ஜன25-

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா தொண்டி அருகிலுள்ள காரங்காடு கிராமத்தில் அமல அன்னை மேல்நிலைப்பள்ளி உள்ளது. அதன் 27ஆம் ஆண்டு

ஆண்டு விழா

இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் ரெஜினி, ராமநாதபுரம் மாவட்டக்கல்வி அலுவலர் சங்கர் ஆகியோரின் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சிவகங்கை லார்மே மாநிலத் தலைவி அருட்சகோதரி தனமேரி, அமெரிக்கா நாட்டில் உள்ள பங்குத்தந்தை செங்கோல் ஆரோக்கியதாஸ், இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் ஆரோக்கியதாஸ் ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். அருட்சகோதரி ஞான சுகந்தா வரவேற்புரை நிகழ்த்தினார். தாளாளர் தலைமையாசிரியர் அருட்சகோதரி செல்வம் ஆண்டறிக்கை வாசித்தார். மாணவ மாணவிகளுக்கு கல்விப்பரிசு, விளையாட்டிற்கான பரிசு வழங்கப்பட்டது. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழா நிறைவில் அருட் சகோதரி அமலோற்பவம் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்வில் மாணவ மாணவிகள், பெற்றோர்கள், கிராம நிர்வாகிகள், முன்னாள் மாணவ மாணவியர், கிராமப் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டத்தில் குடியரசு தினத்தன்று மது விற்பனைக்கு தடைஆட்சியர் எச்சரிக்கை

தேனி ஜன.25-

தேனி மாவட்டத்தில் வருகிற 26ஆம் தேதி குடியரசு தினத்தை முன்னிட்டு, டாஸ்மாக் கடைகள் மற்றும் தனியார் மதுபானக் கூடங்களில் மது விற்பனை செய்யக் கூடாது என மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் உத்தரவிட்டுள்ளார்.



குடியரசு தினத்தை அமைதியாகவும், மரியாதையுடனும் கொண்டாடும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதக அவர் தெரி வித்தார்.

இந்த உத்தரவை மீறி மது விற்பனையில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆட்சியர் எச்சரித்துள்ளார். மேலும், மாவட்டம் முழுவதும் போலீசார் மற்றும் அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூடலூர் அருகே மதுபோதையில் நண்பனை கொலை செய்த வழக்கு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

கூடலூர் ஜன. 25-

கூடலூர் அருகே வெட்டுக்காடு பகுதியில், மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் நண்பனை கொலை செய்த வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



அப்பகுதியைச் சேர்ந்த கலைக்கண்ணன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் நண்பர்கள். சம்பவ தினத்தன்று இருவரும் மது அருந்திய நிலையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில், பாலமுருகன் இரும்புக் கம்பி உள்ளிட்ட ஆயுதங்களால் கலைக்கண்ணனை தாக்கினார்.

இதில் கலைக்கண்ணன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த கொலை வழக்கு தொடர்பான விசாரணை நேற்று நிறைவடைந்தது. வழக்கை விசாரித்த மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி, குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து பாலமுருகனுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

தீர்ப்பைத் தொடர்ந்து, போலீசார் பாலமுருகனை காவலில் எடுத்து சிறையில் அடைத்தனர்.

# கலை கலாச்சார அணி சார்பில் மாறுவேட - நடனப் போட்டி விஜய் போல் நடனமாடி அசத்திய குழந்தைகள்

மதுரை,ஜன 25-

மதுரை காளவாசல் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், தமிழக வெற்றி கழகத்தின் மதுரை மாநகர் தெற்கு மாவட்ட கலை, கலாச்சார பண்பாட்டு அணி சார்பில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்ற மாறுவேடப் போட்டி மற்றும் நடனப் போட்டி சிறப்பாக நடைபெற்றது.இந்த போட்டியை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். தங்கப்பாண்டி தொடங்கி வைத்து, வெற்றி பெற்ற குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். தமிழக வெற்றி கழகத்தின் கலை, கலாச்சார பண்பாட்டு அணி சார்பில் மதுரையில் முதல் முறையாக



குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான இந்த போட்டிகள் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் கலந்து கொண்டு தங்களது கலைத் திறமைகளை வெளிப்படுத்தினர். குறிப்பாக, பங்கேற்றவர்கள் நடிகரும் த க வெ கழகத்தின் தலைவருமான விஜய் போல் மாறுவேடமிட்டு, நடனமாடி பார்வையாளர்களை கவர்ந்தனர்.மாறுவேடப் போட்டி குழந்தைகள் பிரிவுமுதல் பரிசு : யாஷ், சாய் தனிவிக் ரூ.1500 ரொக்கம், கோப்பை, சான்றிதழ்

இரண்டாம் பரிசு : அருனேஷ், சாரா, கிருத்திக் ரூ.1000 ரொக்கம், கோப்பை, சான்றிதழ்பெரியவர்கள் பிரிவு

முதல் பரிசு : ரூ.6000 ரொக்கம், கோப்பை மற்றும் சான்றிதழ்மேலும், போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரை மாநகர் தெற்கு மாவட்ட கலை, கலாச்சார பண்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் ஹினியா தலைமையில், இணை அமைப்பாளர்கள் சக்திவேல், நரேஷ் நாராயணன், மீனாட்சி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்,

## காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் ஊராட்சியில் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டப்படுமா?

கிருஷ்ணகிரி, ஜன. 25-

சட்டசபை கேள்வி நேரத்தில், கிருஷ்ணகிரி தொகுதி அ.தி.மு.க. யரை எம்.எல்.ஏ. அசோக்குமார், 'கிருஷ்ணகிரி தொகுதியில் காவேரிப்பட் எல். டினம் ஊராட்சி ஒன்றியம், ஜெகதாப் கிராமத்தில் உள்ள உயர்நிலை பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்ட அரசு முன்வருமா? என கேள்வி எழுப்பினார். அதற்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அங்கு 3 வகுப்பறைகள் தேவைப்படுகிறது. கருத்துரு பெறப்பட்டு, பேராசிரியர் அன்பழகன் மேம்பாட்டுத்திட்டத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்' என்று பதில் அளித்தார். மேலும், எம்.எல்.ஏ. அசோக்குமார், 'கம்பம்பள்ளி ஊராட்சியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைபள்ளியில், 2019 20 ல் இருந்து 2024 25 வரையில் மாணவர்கள் எண்ணிக்கை



அதிகரித்துள்ளது. அங்கு கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகிறது. அதனை கட்டித்தர அரசு முன்வருமா? என துணைக்கேள்வியை முன்வைத்தார். அதற்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அளித்த பதில் வருமாறு: அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைவதாக பல விமர்ச சனங்களை முன்வைத்தார்கள். அதற்கு எம். எல்.ஏ. அளித்த புள்ளி விவரங்கள் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதை காட்டுகிறது. அவருக்கு நன்றி. மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதற்கான கட்டமைப்பையும், ஆசிரியர்களையும் வே தரவேண்டியது அரசின் கடமை. அந்த வகையில், அரசு செய்து ட கொடுக்கும். பேராசிரியர் அன்பழகன் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முதல்அமைச்சர் 4,877 பள்ளிகளில், ரூ.3,878 கோடி மதிப்பில் உள்கட்டமைப்புகள் செய்ய சொன்னார். அதில் 17,314 வகுப்பறைகள் கட்ட வேண்டும் என முடிவு செய்து, அவற்றில் 9,416 வகுப்பறைகள் கட்டிமுடித்துள்ளோம். மீதமுள்ள 7,898 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆய்வகங்கள், கழிவறைகள் என இலக்கு வைத்ததை தாண்டி சென்று கொண்டிருக்கிறோம். யார், யாருக்கெல் 4 லாம், வகுப்பறை கட்டிடங்கள் தேவைப்படுகிறதோ அதனை செய் வோம். இவ்வாறு அவர் பேசினார்.

## வண்டலூரில் உள்ள ராமானுஜர் பொறியியல் கல்லூரி சார்பில் நடத்தபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட மாணவிகள் ,போக்குவரத்து காவலர்களுடன் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

வண்டலூர் ஜனவரி 25-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த கொளபாக்கத்தில் உள்ள ராமானுஜர் பொறியியல் கல்லூரி சார்பில் போக்குவரத்து விதிமுறைகள் குறித்து கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ.தனபால் தலைமையில் முதலாம் ஆண்டு துறை தலைவர் ஜே.வெங்கடேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் வண்டலூர் சாலை சந்திப்பில் கூடிய 100க்கு மேற்பட்ட மாணவிகள் தலைகவசம் அணிவதின் அவசியம்,மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்ட கூடாது,செல்போன் பேசி கொண்டு



வாகனத்தை ஓட்ட கூடாது போன்ற போக்குவரத்து விதிமுறைகள் குறித்த பதாகைகளை கையில் ஏந்திய படி போக்குவரத்து காவலர்கள் உதவியுடன் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்,

அப்போது பேசிய போக்குவரத்து உதவி ஆய்வாளர் கண்ணன,

தலைகவசம் அணியாமல் வாகனம் ஓட்டினாள் விபத்தின் போது ஏற்படும் விபத்துகள் குறித்தும்,

அதற்கான அபராத தொகை செலுத்துவது அதே போல் மதுபோதையில் வாகனம் ஓட்டுவது ,செல்போன் பேசிய படி வாகனம் ஓட்டுவது அதற்கா விதிக்கபடும் அபராத தொகை குறித்து மாணவிகளிடம் விளக்கி தெரிவித்தார்,

மேலும் போக்குவரத்து விதிமுறைகள் குறித்து தங்களின் குடும்பத்திற்கும் நண்பர்களிடம் எடுத்துரைக்குமாறு மாணவிகளிடம் அறிவுறுத்தினார்.

இதில் முதலாம் ஆண்டு கல்லூரி மாணவிகள் பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## முதல் தலைமுறை பட்டதாரியின் வெற்றிக் கதை: முன்னாள் துணைவேந்தர் முனைவர் சுப்பையா புகழாரம்

சிவகங்கை ஜன 25-

கல்வி என்பது ஒரு மனிதனைச் சமூகத்தில் கௌரவமாக வாழ வைப்பதுடன், ஒருவரது மறைவிற்குப் பிறகும் அவருடனேயே நிலைத்து நிற்கும் உன்னதச் செல்வம் என்று அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தரும், ஸ்ரீ ராஜராஜன் கல்விக் குழுமத்தின் தலைவருமான முனைவர் சுப்பையா தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதல் தலைமுறை பட்டதாரியாகக் கல்வி பயின்று, வாழ்வில் வெற்றி பெறும் ஓர் இளைஞனின் வரலாற்றுப் பின்னணியைக் கருப்பொருளாகக் கொண்டு நடத்தப்பட்ட நாடகத்தைப் பாராட்டி அவர் வாழ்த்துரை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

"ஒரு மனிதனுக்கு நிழல் எப்போதும் கூடவே இருக்கும் என்பார்கள். அந்த நிழல் கூட நம்மோடு இருக்க வேண்டுமென்றால், நம் மீது ஒரு வெளிச்சம் பட வேண்டும். அந்த வெளிச்சத்தைப் போன்றதுதான் கல்வி. ஒருவர் தான் ஈட்டிய சொத்துக்கள், வீடு, கார் என அனைத்தையும் தனது காலத்திற்குப் பிறகு வாரிசுகளிடம் விட்டுச் செல்ல முடியும். ஆனால், கல்வி என்பது ஒருவருக்கு மட்டுமே சொந்தமானது. தந்தை படித்து வாங்கிய பட்டத்தை வாரிசுகள் பிரித்துக்கொள்ள முடியாது. அது பெற்றவருக்கு மட்டுமே உரிய கௌரவம்," என்று கல்வியின் சிறப்பை விளக்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சிறந்த நாடக நூல் விருதாளர், 'கலை நன்மணி' அ. ஈஸ்வரன் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். முதல் தலைமுறை பட்டதாரிகளின் போராட்டத்தையும், வெற்றியையும் தத்ரூபமாகச் சித்தரித்த இந்த நாடகம் பார்வையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



■ சிவகங்கை அழகப்பா பல்கலைக்கழகமேனாள் துணைவேந்தரும்ஸ்ரீ ராஜராஜன் கல்வி குழுமத்தின்சேர்மன் ஆகியமுனைவர் சுப்பையா அவர்களை தமிழ்நாடு அரசின் சிறந்த நாடக நூல் விருதாளர் "கலை நன்மணி!"அ. ஈஸ்வரன் அவர்கள் தான் எழுதி விரைவில் வெளிவர இருக்கும் "முதல் தலைமுறை பட்டதாரி!" என்ற நாடக நூலுக்கு வாழ்த்துரை பெற்றார்,

## 7 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜன.25-

சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிழக்கு திசையில் இருந்து மேற்கு நோக்கி நகரும் வளிமண்டல அலை நிகழ்வு தற்போது நிலவுகிறது. மேலும் தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று(ஜன.24) கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை, செங்கல்பட்டு,காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நாளை (25ம் தேதி) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 26ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக் கூடும்.

27 முதல் 29ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும்.

இன்றும், நாளையும் தமிழக கடலோரப் பகுதிகள்,மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 60 கி.மீ. வேகத்தில் சூறாவளிக்காற்று வீசக் கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு வானிலை ஆய்வு மைய செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



## மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் ஓட்டுநர் தினம்

திருச்சி, ஜன.25-

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகா சத்திரம் டு கோட்டார் பட்டி போகும் பஸ் ஓட்டுநர் வி.பழனிச்சாமி நடத்துனர் S.செல்வேந்திரன் அமைப்பின் இளைஞர் அணி துணைத் தலைவர் ஜான் ஓட்டுநர் இருவருக்கும் அமைப்பின் சார்பில் பொன்னாடை அணிவித்து பொக்கே கொடுத்து இணைப்புகள் வழங்கி அவர்களை வாழ்த்தி உள்ளனர் இதில் அமைப்பின் நிறுவன பொதுச் செயலாளர் A. ஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் மாநில பொருளாளர் பானுமதி மாநில மகளிர் அணி துணை ஆலோசகர் ஈஸ்வரி மாநில மகளிர் அணி துணை தலைவர் காந்திமதி மாநில மகளிர் துணை ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரி திருச்சி மாவட்ட துணைத்தலைவர் மாரியம்மாள் திருச்சி மாவட்ட மகளிர் அணி ஆலோசகர் செல்வி திருச்சி மாவட்டம் மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் பழனியம்மாள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## சிவகங்கை சேர்மன் சி. எம். துரை ஆனந்த் புதிய அங்கன்வாடி கட்டடத்தை திறந்து வைத்தார்

சிவகங்கை ஜன 25-

சிவகங்கை நகர்மன்றத் தலைவரும் , நகர்க்கழக திமுக செயலாளருமான சி. எம். துரை ஆனந்த் வார்டு எண் 18 ல் புதிய அங்கன்வாடி மையக்கட்டடத்தை திறந்து வைத்தார்...

18 வது நகர் வார்டுப் பகுதி பொதுமக்களது கோரிக்கையையும் வார்டு நகர்மன்ற உறுப்பினர் இராஜேஷ்வரி

பரிந்துரையையும் ஏற்று சுமார் 17.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டடத்தை சேர்மன் துரை ஆனந்த் திறந்து வைத்தார்.

.நகர்மன்ற உறுப்பினர் இராஜேஷ்வரி இராமதாஸ் , நகராட்சி ஆணயாளர் , பொறியாளர், நகராட்சி அலுவலரகள் ஆகியோரது முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ...

திமுக வழக்கறிஞரணி மாவட்ட அமைப்பாளர் , வழக்கறிஞர் பாஸ்கரன் , மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளர் , கவுன்சிலர் அயூப் கான் , கவுன்சிலர்களான ஜெயகாந்தன் , தொகுதி ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் சதீஷ் குமார் , கவுன்சிலர்கள்

கீதா கார்த்திகேயன் , மதியழகன் , இராமதாஸ் , ஒப்பந்ததாரர் கண்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

## சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம்

### திருமலை முத்துராமலிங்கம் தலைமை

சிவகங்கை ஜன 25-

சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டமானது கழக மூத்த முன்னோடி, அவைத்தலைவர் காவேரி மணியன் தலைமையிலும் , ஒன்றிய துணைச் செயலாளர்களான வில்லிபட்டி பண்ணையார் ஆ. இராமமூர்த்தி , ஒ புதூர் செல்வம் , மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் , ஒன்றிய பொருளாளர் மின்வாரிய தொமுச முருகேசன், மாவட்ட பிரதிநிதிகளான லெ. சோமசுந்தரம் , சோழபுரம் இரா.மாரி , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான மதிவாணன் , கிங் கார்த்திக், மாவட்ட ஐடி விங் துணை ஒருங்கிணைப்பாளர் வாடிவாசல் முதாதுவேல்செல்வம் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...

இதில் சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை ஆறு. முத்துராமலிங்கம் கலந்து கொண்டு ,

எதிர்வரும் சட்டமன்ற பொதுத்தேர்தல் குறித்தும் , வருகிற 30 மற்றும் 31 தேதிகளில் சிவகங்கை மாவட்டத்திற்கு




வருகைதர உள்ள கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சருக்கு சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழகம் சார்பில் அதிகளவில் உடன்பிறப்புகள் கலந்து கொள்வதென்பன உள்ளிட்ட ஆலோசனைகளை வழங்கினார்...

இந்த நிகழ்ச்சியின்போது ஒன்றிய மேனாள் பொருளாளர், இடையமேலூர் கிளைக்கழக செயலாளர் நா. சேகர் , கூட்டுறவு சங்க மேனாள் தலைவர், அலவாக்கோட்டை கிளைக்கழக திமுக பொறுப்பாளர் அலவை கே ஆர். நாகராஜன் , ஒன்றிய மேனாள் கவுன்சிலர் இடையமேலூர் கருப்பணன் , கிளைக்கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடி நாகரத்தினம் சத்தியவான் , என். இராமநாதன் , காஞ்சிரங்கால் ஏழுமலை , சுப்பு , ஒக்கூர் ஆறுமுகம் , ரமேஷ் , பால்சாமி , ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் லதா நாகராஜன் , சொக்கலிங்கபுரம் முருகானந்தம் , ஒன்றிய மேனாள் கவுன்சிலர் நதியா இளஞ்செழியன் , அரசனிப்பட்டி ஜிம் , செந்தில்குமார் , திவான் , இளஞ்செழியன் , கீழப்பூங்குடி கருணாநிதி, திருப்பதி , ராஜா , சத்யா , அசோகன் , இளைஞரணி காடமுத்தான்பட்டி ப. சுரேஷ்குமார் , அருண்பாண்டியன் , சுகுமார் , அண்ணா நகர் சுரேஷ் , இலந்தங்குடிப்பட்டி சங்கர் ,உள்ளிட்ட ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...கூட்டத்தின் இறுதியில் சிவகங்கை வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இடையமேலூர் வேல்முருகன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்...

## தாம்பரத்தில் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றம் கழகம் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட சமூகநீதி மாணவர் இயக்கத்தின் மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது

தாம்பரம் ஜனவரி 25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த காந்திசாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகம் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் சமூகநீதி மாணவர் இயக்கத்தின் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் எஸ்.எம்.ஐ மாநில பிரதிநிதி ஜெய்னுல் ஆபுதீன் தலைமையில் நடைபெற்றது. செயல்வீரர்கள் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மணிதநேய மக்கள் கட்சியின் மாநில துனைப் பொதுசெயலாளரும், மாமன்ற உறுப்பினருமான தாம்பரம் யாக்கூப், மமக, தமுமுக வடக்கு மாவட்ட தலைவர் ஜாஹிர்




உசேன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். செயல் வீரர்கள் கூட்டதில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய மாநில பிரதிநிதி ஜெய்னுல் ஆபுதீன் பேசுகையில் வருகின்ற பிப்ரவரி மாதம் 8 ஆம் தேதி மாணவரணி வெள்ளி விழா மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டையெட்டி தாம்பரத்தில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. எனவும் மாணவர் உரிமைகளுக்காக போராட கூடிய போராட்டங்களை முன்னெடுக்கும் மாணவ தலைவர்களை 2019 ஆண்டு கைது செய்து சிறையில் அடைத்து அவர்களுக்கு பிணைவழங்காமல் அவர்களை அச்சுறுத்தும் மத்தியரசை கணடித்தும் அவர்களுக்கு விரைவில் பிணை வழங்க கோரி மத்தியரசை கேட்டுகொள்வதாகவும், மேலும் இந்த மாநாட்டில் மாணவர்களை ஒன்று திரட்டில் தமிழகத்தில் ஒரு புரட்சி மாநாடாக அமையும் எனவும் தமிழகம் முழுவது உள்ள மாணவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்பார்கள், 2019 ல் பாத்திமா லத்தீப் ஒரு பேராசிரியரால் தூண்டபட்டு மண அமுத்தத்தால் தற்கொலை செய்து அந்த வழக்கு சி.பி.ஐ க்கு மாற்றபட்டு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை, இந்த செயல்வீரர்கள் கூட்டம் முலமாக நீதி கிடைக்க வலியுறுத்துகிறோம் எனவும் இந்த மாநாட்டில் ஆர்.எஸ்.எஸ் சங்பரிவார் அமைப்பிற்கு சிம்ம சொப்பனமாக திகழக்கூடிய துனை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சமுதாயத்தின் தலைவர் எங்கள் பேராசிரியர் ஜவாஹிருல்லா கலந்து கொள்கிறார் என தெரிவித்தார்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழ்க்கூடல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை தமிழாசிரியை சுகந்தி திராவிட மொழியின் முதன்மை மொழி தமிழ் குறித்து சிறப்புரை ஆற்றினார்கள். பள்ளியின் தமிழாசிரியை பாப்பாத்தி நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார். ஆங்கில ஆசிரியை திவ்யா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கணித ஆசிரியை இராமஜெயம் பிரியா நன்றிகூறினார். விழாவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தலைமையாசிரியர் பாலகிருஷ்ணன் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.



## அகில இந்திய பெண்கள் மற்றும் சமூக நல அமைப்பு மற்றும் ஐவா (aiwa) இணைந்து பெண்களுக்கான பெண்கள் தொழில் முனைவோர் கூட்டமைப்புஎனும் புதிய அமைப்பு துவக்கவிழா

சென்னை, ஜன.25-

அகில இந்திய பெண்கள் மற்றும் சமூக நல அமைப்பு மற்றும் ஐவா(aiwa) இணைந்து பெண்களுக்கான பெண்கள் தொழில் முனைவோர் கூட்டமைப்புஎனும் புதிய அமைப்பு துவக்கவிழா அது குறித்த கருத்தரங்கம் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்றது அனைத்து இந்திய பெண்கள் மற்றும் சமூக நல சங்க நிறுவனத் தலைவர் முனைவர் சித்ரா குமரேசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு வணிகர்கள் சங்கங்களின் பேரமைப்பு மாநில செய்தி தொடர்பாளர் பாண்டியராஜன் எம் எஸ் எம் இ (msme) தொழில் முனைவோருக்கானஅமைப்பின் ஆலோசகர் ரெட்டி': வீரபாண்டிய கட்டபொம்மன் வம்சத்தைச் சேர்ந்த இளைய கட்டபொம்மன்: அமைப்பின் தணிக்கை துறையினர் சதீஷ் பிரபு சண்முகசுந்தரம் தேசிய செயலாளர் தாமோதரன் ஆகியோர் நிகழ்ச்சியை துவக்கி வைத்து தொழில் துவக்கம் அதற்குரிய ஆலோசனைகள் குறித்து ஊக்க உரையாற்றினர் தேசிய பொதுச்செயலாளர் பூங்கோதை செயலாளர் அஸ்வினி தென்னிந்திய செயலாளர் கௌரி தேசிய செயலாளர் தாமோதரன் மாநில தலைவி மோனிகா துணை செயலாளர் கீதா துணைத்தலைவி மோனிகா மற்றும் 25 மாவட்டங்களை சேர்ந்த அமைப்பின் தலைவி கள் 200 க்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்



## கடல் அரிப்பு அபாயத்தில் கச்சத்தீவு அந்தோணியார் ஆலயம்!

ராமேசுவரம், ஜன.25-

கடல் அரிப்பினால் பாதிக்கப் பட்டுள்ள கச்சத்தீவு அந்தோணியார் ஆலயத்தை பாதுகாத்திட வேண்டும் என, இரு நாட்டு பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கச்சத்தீவானது, ராமேசுவரத்திலிருந்து 12 கடல் மைல் தொலைவிலும், இலங்கை நெடுந்தீவில் இருந்து 8 கடல் மைல் தொலைவிலும் பாக் நீரிணை கடற்பரப்பில் அமைந்துள்ளது.

ராமேசுவரத் திலிருந்து இரண்டரை மணி நேரத்திலும், இலங்கையின் நெடுந்தீவு மற்றும் தலைமன்னாரில் இருந்து ஒன்றரை மணி நேரத்திலும் கச்சத்தீவை அடையலாம்.

கடலில் இயற்கைச் சீற்றம், புயல் மற்றும் பேராபத்து காலங்களில் காப் பாற்றவும், பெருமளவு மீன் கிடைக்கவும், மீனவர்கள் வழிபாடு நடத்திய பின்னரே கடலுக்குள் செல்வது வழக்கம்.

ராமேசுவரம் ஓலைக்குடாவைச் சேர்ந்த அந்தோணிப்பிள்ளை பட்டங்கட்டி மற்றும் தொண் டியைச் சேர்ந்த சீனிக்குப்பன் பட்டங்கட்டி ஆகியோரால், கடந்த 1913 ம் ஆண்டு கச்சத்தீவில் சிறிய ஓலைக் குடிசையில் புனித அந்தோணியார் ஆலயம் நிறுவப்பட்டது.

ஆண்டுதோறும் கிறிஸ் தவர்களின் தவக்காலத்தில் கச்சத்தீவு திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு கச்சத்தீவில் அந்தோணியார் ஆலயத் திருவிழா பிப்ரவரி 27, 28 ஆகிய 2 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், கடந்த மாதம் இலங்கையை தாக்கிய புயலினால், அந்நாட்டில் 643 பேர் உயிரிழந்தனர், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். மேலும், டிட்வா புயல் அந்நாட்டில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. இதன் தாக்கம் கச்சத்தீவையும் விட்டு வைக்கவில்லை.

அலைகள் அடித்து கரைகளில் ஒதுங்கும் குப்பை கச்சத்தீவில் குவிந்து கிடப்பதுடன், கடல் அரிப்பினால் ஒரு கரையில் இருக்கும் புனித அந்தோணியார் ஆலயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 27, 28 ஆகிய 2 நாட்கள் கச்சத்தீவில் நடைபெற உள்ள அந்தோணியார் ஆலயத் திருவிழாவில் 8 ஆயிரம் பேர் கலந்து கொள்ள உள்ள நிலையில், திருவிழாவுக்கு முன்பே கடல் அரிப்பிலிருந்து கச்சத்தீவையும், அந்தோணியார் ஆலயத்தையும் பாதுகாக்க வேண்டும் என இரு நாட்டு பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்திய ஜப்பான் நட்புறவை வலுப்படுத்திய ஜப்பானிய தேநீர் விழா வேல்ஸ் வித்யாஷ்ரம் பள்ளியில் கலாச்சார கொண்டாட்டம்



பல்லாவரம் ஜன 25-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம், தர்கா சாலையில் அமைந்துள்ள "வேல்ஸ் வித்யாஷ்ரம் மேல்நிலைப் பள்ளி" 23.01.26 அன்று, இந்தியஜப்பான் கலாச்சார நட்புறவை வளர்க்கும் வகையில் ஜப்பானிய தேநீர் விழாவை நடத்தியது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஜப்பான் தூதரக உறுப்பினர் மாமி டெரோகா அவர்களும், பள்ளியின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் ஆர்த்தி கணேஷ், இயக்குநர்கள் மற்றும் பள்ளி முதல்வர் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஹயகாவாவைச் சேர்ந்த புகழ்பெற்ற தேநீர் ஆசிரியர் யூகோ ஷிமிசு தலைமையில் இவ்விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் வியக்கத்தக்க கலாச்சார கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மேலும், உலகளாவிய கலாச்சார பரிமாற்றத்திற்கான வேல்ஸ் கல்விக் குழுமங்களின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், நல்லிணக்கம், மரியாதை மற்றும் நினைவாற்றலை வலியுறுத்தும் ஜப்பானிய மரபுகளை மாணவர்கள் உணர்வுபூர்வமாக அனுபவித்து மகிழ்ந்தனர்.

விழாவில் பேசிய தூதரக உறுப்பினர் "பிற நாடுகளின் கலாச்சாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை மதித்து அதனை கற்றுக்கொள்வதில் இந்த மாணவர்கள் காட்டும் ஆர்வத்தை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. மாணவர்கள் ஜப்பானின் இந்தியா மற்றும் ஜப்பான் இரண்டு நாட்டிற்கும் கலாச்சாரம் மற்றும் பண்பாடு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது அதேபோல் தேநீர் அருந்தும் பழக்கமும் இரு நாடுகளுக்கும் உண்டு அதை எடுத்துக் காட்டும் வகையில் பாரம்பரிய ஜப்பானிய முறையில் தயாரிக்கப்பட்ட தேநீர் மற்றும் தின்பண்டங்கள் இங்குள்ளவர்களுக்கு வழங்கப்பட்டது. இதை மாணவர்களும் ஆர்வத்துடன் வாங்கி அருந்தினர், அதேபோல் ஜப்பானிய தேசிய கீதத்தை அழகாக பாடினர் அவர்களுக்கும் என் பாராட்டுக்கள்" என தெரிவித்தார்.

செய்தியாளர்களை சந்தித்த வேல்ஸ் குழும பள்ளிகளின் நிர்வாக அறங்காவலர் டாக்டர். ஆர்த்தி கணேஷ் "ஒவ்வொரு ஆண்டும் ஒரு மைய கருத்தை கொண்டு அந்த ஆண்டு நிகழ்ச்சிகள் நடைபெறும் இந்த ஆண்டு வேற்றுமையில் ஒற்றுமை என்ற தலைப்பை வைத்து மையக் கருத்தாக வைத்து எங்கள் மாணவர்கள் உலகளாவிய கலாச்சாரம் பண்பாடு , மொழி ஆகியவற்றை அறிந்து கொண்டாடி மகிழ்ந்தனர். அந்தவகையில் ஜப்பான் நாட்டின் கலாச்சாரத்தை அறியும் ஜன்னலாக இன்று இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஜப்பான் பாரம்பரிய முறைப்படி தேநீர் தயாரித்து அழகான ஓவியங்கள் வரையப்பட்ட பளிங்கு கோப்பைகளில் வழங்கப்பட்டது, அத்துடன் ஜப்பானின் தின்பண்டங்களும் வழங்கப்பட்டது. இதனை மாணவர்கள் ஆர்வத்துடன் வாங்கி பருகியும் உண்டும் மகிழ்ந்தனர். எங்கள் பள்ளியில் ஜப்பான் மொழியும் கற்றுத்தரப்படுகிறது.

ஜப்பான் தூதரகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட உள்ளோம் அதன் மூலம் மாணவர்கள் அங்கு சென்று தங்கி அந்த நாட்டின் மொழி கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை அறிந்துக்கொள்வர். ஏற்கனவே ஜப்பான் குறித்த சிறந்த கட்டுரை எழுதிய எங்கள் மாணவர் ஜப்பான் தூதரம் அழைத்து பாராட்டி அவரை ஜப்பான் நாட்டிற்கு அனுப்பி வைத்தது குறிப்பிடத்தக்கது. என்று கூறினார்



## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக தேசிய பெண் குழந்தைகள் தின விழா

சிவகங்கை, ஜன.25-

தமிழ்நாடு அறிவியல் இயக்க கல்லல் கிளை சார்பாக கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் தேசிய பெண் குழந்தைகள் தினம் மற்றும் உலக கல்வி தினம் கொண்டாடப்பட்டது. இதில் பத்தாம் வகுப்பு மாணவிகள் கலந்து கொண்டனர். பெண் குழந்தைகளின் பல்வேறு சிறப்புகளை மாணவிகள் எடுத்து கூறினர். பெண் குழந்தைகளுக்கு கட்டுப்பாடுகள் அதிகம் என மாணவி செல்வி தெரிவித்தார். தன் லட்சியத்தை அடைய பெண் குழந்தைகள் போராட வேண்டு மென்றும்,:இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமியைப் போல் முயற்சி செய்தால் தன்னால் ஒரு சிறந்த மருத்துவராக உருவெடுக்க முடியும் என்றும் மாணவி திரிஷா தன் கருத்தைப் பதிவு செய்தார். பெண் குழந்தைகளுக்கான முக்கியத்துவத்தை சக பெண்களும், பெற்றோர்களும் கொடுக்க வேண்டும் என மாணவி பூமிகா விளக்கினார். பெண் குழந்தைகள் துணிச்சலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என மாணவி சுஜி தனது வாழ்வியல் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.உலகில் உள்ள எதையும், எவரையும் வெல்ல பயத்தை வெல்ல வேண்டும் என மாணவி கௌசல்யா தெரிவித்தார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயலாளர் பிரபு சாதனைப் பெண்களாக உருவெடுக்க பெண்கள் தங்களை எவ்வாறு உருமாற்றிக் கொள்ள வேண்டும், கல்வியின் மூலம் அதை எவ்வாறு சாதிக்கலாம் என சாதனைப் பெண்கள் பலரை முன்னுதாரணமாகக் கூறினார். உலக கல்வி தினம் கொ ண்டா டப்படு வத ன் முக்கியத்துவத்தைப் பற்றியும் அவர் மாணவிகளிடம் விளக்கிக் கூறினார்.

## "எங்களுக்கு விசில் தேவை இல்லை. குக்கரிலேயே விசில் இருக்கிறது'' தமிழிசை

சென்னை, ஜன.25-

"எங்களுக்கு விசில் தேவை இல்லை. குக்கரிலேயே விசில் உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியில் மீண்டும் பல கட்சிகள் இணைய உள்ளன'' என பாஜக மூத்த தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தமிழகத்தில் தேர்தல் அறிக்கை தொடர்பாக அனைத்து துறையைச் சார்ந்தவர்களையும், மக்களையும் சந்திக்க இருக்கிறோம்.

மக்களின் வளர்ச்சி சார்ந்ததாக தேர்தல் அறிக்கை இருக்கும். நீங்களே எங்களை பாராட்டும் அளவுக்கு தேர்தல் அறிக்கை இருக்கும். 2026 தேர்தலில் எங்கள் கூட்டணி நிச்சயம் வெற்றியடையும்.

டபுள் இல்லை, பாஜவின் டிரிபிள் என்ஜின் அரசு பல மாநிலங்களில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், திமுக ஆட்சி சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் ட்ரபுள் (TROUBLE) , மக்களுக்கான திட்டங்களை கொண்டுவருவதில் ட்ரபுள் என ட்ரபுள் எஞ்ஜின் மாடலாக ஆட்சி நடத்துகிறது.

செவிலியர்கள், மருத்துவர்கள், துப்புரவு தொழிலாளர்கள், சத்துணவு பணியாளர்கள் என அனைவரும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுக்கு விசில் இப்போது உடனே தேவை இல்லை. குக்கரிலேயே விசில் உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியில் மீண்டும் பல கட்சிகள் இணைய உள்ளன. எங்கள் கூட்டணி குறித்து திருமாவளவன் கவலைப்பட தேவையில்லை. தேசிய ஜனநாயக கூட்டணி முழுமையாக உள்ளது.

இண்டி கூட்டணிதான் முழுமையடையாத கூட்டணி. அவர்கள் உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டே இருக்கிறார்கள். எப்போது வெடிக்கும் என்று தெரியவில்லை. மத்திய அரசின் அனைத்து உதவிகளையும் பெற்றுவிட்டு, நாங்கள் மத்திய அரசின் உதவியே இல்லாமல் போராடிக்கொண்டிருக்கிறோம், உழைத்துக் கொண்டிருக்கிறோம் என முதல்வர் கூறிவருகிறார்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மின்னணு பயிர் கணக்கிடும் பணிகளை வேளாண் அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்



கிருஷ்ணகிரி,ஜன 25-

தமிழ்நாடு முழுவதும் வேளாண்மை துறையில் மூலம் மின்னணுவு பயிர் கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இப்பணியின்நோக்கம் துல்லியமான பயிர்களை தரவுகள் சேகரிப்பு அதன் மூலம் அரசு மானியம் திட்டங்களுக்கு தேவையான நீதி ஒதுக்கீடு பேரிடர் நிவாரணங்களுக்கு தேவையான பயிர் காப்பீட்டு இழப்புகளை விரைவாக வழங்குதல்,

தகுதியான விவசாயிகளுக்கு வங்கி கடன் பெறுவதை எளிமையாக்குதல் போன்ற பயனுள்ள நன்மைகளை விவசாயிகள் பெறும் நோக்கில் ராபி மற்றும் கரிப் பருவத்திற்குஇந்த டிஜிட்டல் பயிர் கணக்கீடு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது ராபி பருவத்திற்கு மின்னணு பயிர் கணக்கிடும் பணி நடைபெற்று வருகிறது இந்த வகையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்து வரும் இப்பணிகளை வேளாண்மை இயக்குனரகம் சென்னையிலிருந்து பணிபுரியும் வேளாண்மை துணை இயக்குனர் அறிவழகன் ஆய்வு செய்தார் இந்த ஆய்வு பணியின் போது அதில் உள்ள இடர்பாடுகள் குறித்து அலுவலர்கள் மற்றும் தன்னார்வாளர்களிடம் கேட்டறிந்து நேரடியாக வயலில் களப்பணியை ஆய்வு செய்ததுடன் பணியில் ஈடுப்பட்டிருந்த பர்கூர் வட்டார தன்னார்வலரிடம் கேட்டறிந்தார்.

மேலும் இந்த ஆய்வின் போது வேளாண்மை இணைய இயக்குனர் காளிமுத்து , வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் தரக்கட்டுபாடு அலுவலர் சுரேஷ்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும் இதுபோன்று மின்னணு பயிர் கணக்கீடு பணி மேற்கொள்ள விருப்பமுள்ள தன்னார்வலர்கள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு அப்பகுதி வேளாண்மை அலுவலர் ,உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோரே தொடர்பு கொண்டு பயனடைலாம் என்று

வேளாண்மை இயக்குனரகம் சென்னையிலிருந்து பணிபுரியும் வேளாண்மை துணை இயக்குனர் அறிவழகன் தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161